**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BA DEGREE EXAMINATION MAY 2022**
(Second Semester)

Branch – **TAMIL**

**NAATTUPPURAVIYAL**

Time : Three Hours Maximum : 50 Marks

**பகுதி – அ** **(5×1=5)**

**சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. Folklore என்ற சொல்லை உருவாக்கியவர் யார்?
   அ. வில்லியம் பால் தாமஸ் ஆ. வில்லியம் ஹேரி தாமஸ்
   இ. வில்லியம் ஜான் தாமஸ் ஈ. வில்லியம் பெண்டிங் தாமஸ்
2. பிசி என்பது
   அ. பழமொழி ஆ. விடுகதை
   இ. கதை ஈ. கதைப்பாடல்
3. கதைப்பாடல் எத்தனை பகுதிகளைக் கொண்டிருக்கும்?
   அ. 2 ஆ. 3
   இ. 4 ஈ. 5
4. கறந்த பாலைக் காய்ச்சாமல் குடித்தால் …….தானாக வரும்(நிரப்புக.)
   அ.வயிற்றுவலி ஆ.காய்ச்சல்
   இ.காசநோய் ஈ.இரத்தசோகை
5. "நாளும் புள்ளும் பிறவற்றினிமித்தமும்" எனக் குறிப்பிடும் நூல்?
   அ. அகத்தியம் ஆ. தொல்காப்பியம்
   இ. நன்னூல் ஈ. ஆசாரக்கோவை

**பகுதி – ஆ** **(5×3=15)**

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

6. அ. நாட்டுப்புறவியல் குறித்த அறிஞர்களின் கருத்துக்களைப் புலப்படுத்துக.
   (அல்லது)
   ஆ. பழங்குடியினர் நாட்டுப்புறவியல் குறித்து எடுத்துரைக்க.
7. அ. விளையாட்டுப்பாடல்களின் இயல்புகளைக் கூறுக.
   (அல்லது)
   ஆ. ஒப்பாரிப்பாடல்கள் பெண்களின் உளவியல் வெளிப்பாடாய் அமையும் பாங்கினை வெளிப்படுத்துக.
8. அ. நாட்டுப்புறக்கதைகளின் தன்மைகளை எடுத்தியம்புக.
   (அல்லது)
   ஆ. தலபுராணங்கள் வழி அறியலாகும் செய்திகளை விளக்குக.
9. அ. பழமொழிக்கும் விடுகதைக்குமுள்ள வேறுபாட்டினை ஒப்பிடுக.
   (அல்லது)
   ஆ. தற்காலத்தில் நிகழ்ந்துவரும் கைவினைக்கலைகள் பற்றி எழுதுக.
10. அ. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளைப் பட்டியலிடுக.
    (அல்லது)
    ஆ. நாட்டுப்புறத் தெய்வங்களும் வழிபாட்டுமுறையும் குறித்து விளக்குக.

**Cont...**

பகுதி - இ (5×6=30)

**கீழ்க்காணும் வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளி.**

11. அ. நாட்டுப்புறவியல் - பிரிவுகளை வகைப்படுத்துக.
(அல்லது)
ஆ. தமிழக நாட்டுப்புறவியல் வரலாற்றினை ஆய்ந்தறிக.

12. அ. தாய்மை உணர்வின் வெளிப்பாடே தாலாட்டுப்பாடல்கள் என்பதை நிறுவுக.
(அல்லது)
ஆ. நாட்டுப்புறப்பாடல்கள் வழி கிராம மக்களின் பண்பாட்டினைப் படம்பிடித்துக் காட்டுக.

13. அ. கதைப்பாடல்கள் காட்டும் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் குறித்து விளக்குக.
(அல்லது)
ஆ. தற்காலத்தில் நிகழ்ந்துவரும் கதைப்பாடல் நிகழ்வுகள் குறித்து நீவிர் அறிந்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

14. அ. நாட்டுப்புற மருத்துவத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.
(அல்லது)
ஆ. புழங்குபொருட்கள் மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கருவிகளாகும் என்பதை ஆய்க.

15. அ. நாட்டுப்புற நிகழ்த்துகலைகளின் இயல்பும் தற்கால நிலையும் குறித்து விளக்குக.
(அல்லது)
ஆ. நாட்டுப்புற மக்களின் கிராம வாழ்வியலை நும் பாடப்பகுதி கொண்டு நிறுவுக.

Z-Z-Z END